# பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து




இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் அவர்கள் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

# ஜெபித்த தாய்மார்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: தீட்டுக்களிக்கும் தண்ணீர், ஜுன் 6, 1955, பத்தி எண் 33

நீங்கள் முதலாவது சமையலறைக்கு வருகிறீர்கள். சமையலறை, அங்கே தான் நீங்கள் புசிக்கிறீர்கள். நீங்கள் வந்து, புசித்த பிறகு, சபையைப் போன்று, நீங்கள் பெஞ்சின் மேல் அமர்ந்து, வார்த்தையை கேட்கிறீர்கள். "விசுவாசம் கேள்வியினாலே வரும், வார்த்தையைக் கேட்பதினால் வரும்."

அதன்பிறகு நீங்கள் வார்த்தையைப் புசித்த பிறகு, நீங்கள் அமர்ந்து அளவளாவும் அறைக்குள் (living room) வருகிறீர்கள், அது சபையிலுள்ள மற்றவர்களோடு கொண்டிருக்கும் ஐக்கியத்திற்குள் இருக்கிறது.

அதன்பிறகு, **அந்தரங்கமாக இடம் யாதெனில் படுக்கையறை தான்,**

**அதனுள்ளே நீங்கள் பிரவேசித்து, முழங்கால்படியிடுகிறீர்கள், அங்கே தான் வழக்கமாக, நீண்ட காலத்திற்கு முன்பு, தாய்மார்களாகிய உங்களில் நிறைய பேர், உட்பிரவேசித்து, உங் கள் பிள்ளைகள் இரவில் வெளியி லிருந்த போது, அவர்களுக்காக ஜெபம் பண்ணுவீர்கள்.**

இன்றைக்கு உலகத்தோடுள்ள காரியம் அதுதான், அதோ அங்கே முற்காலத்தில், நீண்ட காலத்திற்கு முன்பு, தங்கள் பிள்ளைகளுக்காகவும் மற்றும் காரியங் களுக்காகவும் ஜெபித்த அந்தப் பழைமை நாகரீகமான தாய்மார்களுக் குப் பதிலாக, இன்றிரவோ அவர்கள் தங்கள் பிள்ளைகளோடு வெளியேயிருந்து,

**புகைப்பிடித்துக்கொண்டும், மது அருந்திக் கொண்டும், அவர்கள் இருப்பது போன்று தொடர்ந்து செய்து கொண்டும் இருக்கிறார் கள்.**

**ஆகையால் தான் இளம்பருவத் தினரின் குற்றச் செயல்களை நாம் பெற்றிருக்கிறோம்.**

அவர்களுக்கு இருந்த நாகரிகத்தைக் காட்டிலும், நாம் அதிக நாகரிகம் கொண்ட வர்களாக பேசிக்கொள்கிறோம். எனக்கு அது சந்தேகமாயிருக்கிறது. உ-ஊ. அப்படியானால் நிச்சயமாக அதைப் போன்று நடந்திருக்க மாட்டோமே. ஒரு காரியம் உண்மை. **அந்தப் பழைமை நாகரீகமான பாணி எனக்குப் பிடிக்கும்**.

# அம்மாவும் அப்பாவும் கூட உங்களைக் காணாத இடத்தில், நீங்கள் போய் ஜெபிக்கும் ஒரு இரகசிய இடம் உங்களுக்கு உண்டா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## *செய்தி:* **மோசேயைக் குறித்த போதனை,** மே 13, 1956, பத்தி எண் 128

128. நீங்கள் ஜெபிக்கிறீர்களா? எத்தனை சிறு பையன்களும் சிறுமிகளும் ஜெபிக்கிறீர்கள்? உங்கள் கரங்களைப் பார்ப்போம்.

ஓ, அது அருமையானது. இப்பொழுது, அது நல்லது.

**அம்மாவும் அப்பாவும் கூட உங்களைக் காணாத இடத்தில், நீங்கள் போய் ஜெபிக்கும் ஒரு இரகசிய இடம் உங்களுக்கு உண்டா?**

நீங்கள் அவ்விதமாக ஜெபிக்கிறீர்களா? நீங்கள், நீங்கள் அவ்விதம் ஜெபிப்பது இல்லையா?

**ஒரு சிறிய இடத்தைக் கொண்டிருந்து, இரகசியமாக நழுவிச் சென்று (slip out), ஜெபியுங்கள்,** உங்கள் சிறு ஜெபத்தைச் செய்யுங்கள்.

**நீங்கள் படுக்கைக்குப் போகும் முன்பு, ஒவ்வொரு இரவும் அதை ஜெபிக்கிறீர்களா?**

**நீங்கள் காலையில் எழும் போதும், மற்றும் காரியங்களிலும் அதை ஜெபிக்கிறீர்களா?**

ஓ, அது நல்லது. மற்ற எத்தனை சிறு பையன்களும் சிறுமிகளும் ஜெபிக்கிறீர்கள் (உங்கள் கரத்தை மேலே உயர்த்துங்கள்)? கட்டிடம் (முழுவதும்) நிறைய பேர்.

ஓ, அது அருமையாக இல்லையா? நல்லது, இப்பொழுது, அது நல்லது.

**அது நீங்கள் இந்தக் காரியங் களைச் செய்ய வேண்டுமென்று உங்களுக்கு போதிக்கிற ஒரு உண் மையான தாயையும் தகப்பனை யும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்பதைத்தான் காட்டுகிறது.**

**இப்பொழுது, நீங்கள் உண்மை யாகவே தேவையில் இருக்கும் போது தான், நீங்கள் அதிக உத்தம மாக ஜெபிப்பீர்கள்.** அது அவ்வாறு இல்லையா?

★★★★★

"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை வளர்த்து." புரிகிறதா? அதை வளர்த்து, அதற்கு சரியாகப் போதியுங்கள். அது நிச்சயமாகவே, அதைவிட்டுப் விலகிச்செல்லாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 56-10-02E தீர்க்கதரிசியாகிய எலிசா

26. இப்பொழுது, இன்றிரவில், நாம் பேசிக் கொண்டிருக்கும் தீர்க்கதரிசி எலிசா வாகும், அவன் எலியாவுக்கு பின்வந்த தீர்க்க தரிசியாக இருக்கிறான்.

எலியா ஒரு மகத்தான மனிதனாக இருந் தான். அவன்... இங்கே அன்றொரு இரவில், தேவனுடைய நியாயத்தீர்ப்பாகவோ, அல்லது தேவனுடைய நீதியாகவோ, அவனைக் குறித்துப் பேசினோம். எலியா ஒரு மகத்தான வல்லமையுள்ள தீர்க்கதரிசியாக இருந்தான்.

27. நாம்... பிறகு, நான் ஒவ்வொரு சாயங் காலத்திலும், வீட்டில் இருக்கும் போது... எல்லாவற்றையும் சுத்தம் செய்துவிட்டு

(cleaned out), நான் என்னுடைய சிறு மகள்களை எடுத்து, அவர்களுக்கு வேதாகமத்தைக் கற்றுக் கொடுக்கிறேன் (Bible study): அவர்களையும், மனைவியையும் குழந்தையையும் காரில் இருத்தி, அவ்வண்ணமாக எவரும் எங்களை இடைஞ்சல் செய்யாதவகையில் அங்குமிங்கும் சுற்றியவாறு ஓட்டிக்கொண்டு போவேன்.

அப்போது நான் அவர்களிடம், “எலியா என்பவன் யார்? அவன் என்னவாக இருந்தான்?” என்பது போன்ற கேள்விகளைக் கேட்பேன்.

அந்தச் சிறிய ஆறு வயது மகளும் எட்டு வயது மகளும் மிக வேகமாக, “திஸ்பியன்” என்று பதிலளிப்பார்கள். பாருங்கள், மிகத் துரிதமாக பதிலளிப்பார்கள்.

பிறகு நான், “அவன்... ஆக இருந்தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும். இன்

றைக்கு நீங்கள் அவனைச் சந்தித்திருந்தால், உங்களால் எப்படி கூற முடிந்திருக்கும்? அவன் எவ்விதமான ஒரு மனிதனாக இருந்தான்?" என்று நான் கேட்பேன்.

"ஓ, அவன் மயிரடர்ந்த (முடி நிறைந்த) ஒரு மனிதனாகவும், தன்னுடைய இடுப்புகளைச் சுற்றிலும் தோலைப் (போர்த்தினவனாகவும்) இருந்தான்." சிறிய ரெபேக்காளோ அல்லது சாராளோ, ஒருவள் உரக்கச் சத்தமிட்டு பதில் கூறுவாள். பாருங்கள்?

28. அப்படியே தொடர்ந்து அவர்களுடைய சிந்தைகளுக்குள் (உள்ளங்களுக்குள், மனசுகளுக்குள் - மொழிபெயர்ப்பாளர்) அதை கற்பித்து (போதித்து) கொடுத்துக் கொண்டேயிருங்கள், தொடர்ந்து அதை போதித்துக்கொண்டேயிருங்கள் (drilling).

தாயே, அதைத்தான் நீ உன்னுடைய பிள்ளைகளிடம் செய்கிறாய்.

பட்டணத்தில் இங்குமங்கும் ஓடிக்கொண் டிருப்பதையும், இன்பத்தைத் தேடி ஊர் சுற்றிக் கொண்டிருப்பதையும் விட்டுவிடுங்கள்; வேதாகம போதனைகளையும் மற்றும் காரி யங்களையும் உங்கள் பிள்ளைகளுக்குக் (கற்றுக்) கொடுங்கள். செய்ய வேண்டிய காரி யம் அதுதான்-அதுவே தான்.

29. இங்கேயுள்ள சமுதாயங்களும் பதவி களும் எல்லாமே, அது சபையில் இருந்த போதிலும், பிள்ளைகளை வளர்க்க நேரமே யில்லாத அளவுக்கு, சபையானது மிகவும் மொத்தமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

பெண் பிரசங்கிமார்களைக் குறித்து நான் பேசுவதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். இப்பொழுது, நான் அதன் பேரிலே திரும்பிப் போக (crawl back) வேண்டியிருக்கலாம்.

ஆனால் நான் இதை உங்களிடம் கூறட்டும்: ஒவ்வொரு தாயும் ஒரு பிரசங்கியாக இருக்கிறாள். நிச்சயமாக. அவள் பிரசங்கம் செய்யும்படியாக வீட்டிலேயே ஒரு சிறு சபையை தேவன் அவளுக்குக் கொடுத்திருக்கிறார்.

எனவே, இப்பொழுது, அப்படியே அதைத் தொடர்ந்து செய்துகொண்டிருங்கள். அது நல்லது. நீங்கள் முதலில் அதைப் பெற்றுக்கொள்ளுங்கள். எனவே பிறகு, சரியாக உங்கள் பிள்ளைகளோடு கூட செல்லுங்கள்.

30. இங்கே கொஞ்ச காலத்திற்கு முன்பு, நான் ஒரு கட்டுரையை வாசித்துக் கொண்டிருந்தேன், அங்கே ஒரு வீடு இருந்ததாம், இந்த வீட்டில் ஐந்து பையன்கள் பிறந்தார்கள்.

மூத்த பையன் கடற்படைக்குப் போக போதுமான வயதை அடைந்த உடனே, அவன் கடற்படைக்குச் சென்றுவிட்டான்.

இரண்டாவது பையனும் அவனைப் பின்தொடந்து சென்று விட்டான், அவ்வாறே அடுத்தவனும் கடற்படையிலேயே சேர்ந்து விட்டான், மொத்தமாக ஐந்து பையன்களுமே கடற்படையில் சேரும்வரையில், அவ்வாறு எல்லா பையன்களுமே கடற்படைக்குப் (Navy) போய்விட்டார்கள்.

அங்கே அவர்களுடைய குடும்பத்திலே கடற்படையில் வேலை செய்பவர்களோ, அல்லது கப்பற்படையில் வேலைபார்க்கிற வர்களோ யாரும் கிடையாது.

ஏன் இவர்கள், இந்தப் பையன்கள், ஒவ்வொருவரும் கடற்படைக்குப் போக விரும்பினார்கள் என்று தாயாராலும் தகப்ப னாராலும் புரிந்துகொள்ள முடியாதிருந்தது.

31. இதைக் குறித்து மிகவும் நன்றாக - அலசி ஆராய்ந்து பார்த்தார்கள்.

அப்போது படுக்கையறையில், அதைக் கண்டுபிடிக்க நேர்ந்தது, இந்தப் பையன்கள் எல்லாரும் வளர்க்கப்பட்ட இந்தப் படுக்கை யறையில், அங்கே அமைதியானதும், சாந்த மானதுமான ஒரு கடலில், ஒரு பெரிய கப்பல் பிரயாணம் செய்து போய்க் கொண்டிருக்கும் ஒரு அழகான பெரிய படம் தொங்க விடப் பட்டிருந்தது.

அது அந்தப் பையன்களை மிகவும் கவர்ந்து ஈர்த்துவிட்டிருந்தது, அவர்கள் இரவில் படுக்கைக்குப் போகையிலும், இந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

அந்த அமைதியான, உணர்ச்சிகளைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் அளிக்கும் கட லில் கப்பலை ஓட்டிச்செல்ல வேண்டுமென்று அவர்களுடைய சிந்தையில் இருந்தது.

காலையில் அவர்கள் எழும்பும்போதும், அவர்களால் காண முடிந்த முதலாவது

காரியம் இரைச்சலற்ற அமைதியான கடலி னூடாக போய்க் கொண்டிருந்த அந்தக் கப்ப லாகத்தான் இருந்தது.

அது அந்தப் பையன்கள் ஒவ்வொரு வருமே கப்பலோட்டிகளாக ஆகும் அள வுக்கு அவ்வண்ணமாக அவர்களை ஈர்த்து விட்டிருந்தது.

32. இப்பொழுது ஒரு கப்பலின் பட மானது, பையன்களை கடற்படையில் வேலை செய்கிறவர்களாக, கடலில் கப்பலோட்டிகளாக ஆகும்படி கவருமானால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் படமானது என்ன செய்தாக வேண்டும்? பாருங்கள்?

உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக எப் போதுமே சரியான காரியத்தையே கொண் டிருங்கள்.

“பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழி யிலே அவனை வளர்த்து.” புரிகிறதா?

அதை வளர்த்து, அதற்கு சரியாகப் போதி யுங்கள். அது நிச்சயமாகவே, அதைவிட்டுப் விலகிச்செல்லாது.

---

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை.)*



நீ இந்த உலகத்திலே ஒரு பிள்ளையைக் கொண்டு வந்து, அதைச் சரியாக வளர்ப்பாயானால், நித்தியம் முழுவதுமே அந்த ஆசீர்வாதங்களை அனுபவிக்கலாமே. அதோ அங்கே மகிமையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அந்த நட்சத்திரம், நீ அதனோடு சம்பந்தமுள்ளவளாக இருப்பாயே. புரிகிறதா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 56-10-02E தீர்க்கதரிசியாகிய எலிசா

36. தாய்மார்கள் பிள்ளைகளை வளர்க்கவும், பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கவும் எப்படி மறுத்து விடுகிறார்களோ என்று நான் சிலநேரங்களில் நினைப்பதுண்டு.

வாலிப பெண்கள் கருத்தடை பண்ணிக் கொண்டு, சிறிய நாய்களை வாங்கி, அவைகளை சுற்றிலும் நடத்திச் செல்கிறார்கள்.

பெண்மணியே, தேவன் உனக்காக ஒதுக்கிக்கொடுத்து, உனக்கு இருக்கிறதும், தேவனுக்காக இந்த மகத்தான கடமையை உன்னால் செய்ய இயலுவதாக இருக்கப் போகிறதுமான, ஏறக்குறைய உன்னுடைய

இருபது ஆண்டுகால ஜீவியத்தை நீ மாத்திரம் உணர்ந்து கொள்வாயா?

உன்னுடைய பிள்ளை ஒரு தற்கால பின்னியாகவோ, அல்லது-அல்லது அதைப் போன்ற ஏதோவொன்றாக இருக்கலாம் என்று உனக்குத் தெரியுமா?

உன்னால்-உன்னால் பிள்ளைகளை வளர்க்க முடியும் காலம் வரையில், வெறும் இருபது, ஏறக்குறைய உன்னுடைய ஜீவியத்தின் இருபது ஆண்டுகாலத்தில்... (அவ்வாறு உன் பிள்ளையை வளர்க்கலாம் என்று) நீ உணர்ந்துகொள்கிறாயா?

37. **நீ இந்த உலகத்திலே ஒரு பிள்ளையைக் கொண்டு வந்து, அதைச் சரியாக வளர்ப்பாயானால், நித்தியம் முழு**

**வதுமே அந்த ஆசீர்வாதங்களை அனுபவிக்கலாமே.**

**அதோ அங்கே மகிமையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அந்த நட்சத்திரம், நீ அதனோடு சம்பந்தமுள்ளவளாக இருப்பாயே. புரிகிறதா?**

அப்படியானால், நீ சுற்றிலும் இங்குமங்குமாக ஓடிக் கொண்டிருந்து, அவ்விதமே தொடர்ந்து செய்து கொண்டிருப்பதையே அதிகம் விரும்புகிற காரணத்தினால், இந்தச் சிறு பிள்ளைகளை வளர்க்க மறுப்பது என்பது, அது அபத்தமாக இருக்கிறது.

நீ அதைச் செய்ய கூடாது. இப்பொழுது, அதைச் செய்யாதே. இல்லை, ஐயா, நீ அதைச் செய்யாதே. நீ ஒரு சந்தோஷமான நபராக இருக்கிறாய்.

38. பழங்கால தாய்மார்கள், பிள்ளைகளை வளர்க்க அவர்கள் விரும்பினார்கள்.

ஆனால், ஓ, நாம் இப்பொழுது ஜீவித்துக் கொண்டிருக்கும் இந்த நவீன அமெரிக்க காலம்: நம்முடைய தேசம் சுத்தமாக கறைப் பட்டுவிட்டது.

நான் பார்க்கிற பிரகாரமாக, இந்த தேசத் திற்கு ஒரு நம்பிக்கையுமே விடப்பட வில்லை.

பழம்பாணியிலான ஒரு எழுப்புதல் மாத்திரமே, வேதவாக்கியத்தின்படி அத் தகைய பழம்பாணியிலான எழுப்புதல் ஒரு போதும் நாடு முழுவதுமாக இருக்கவே இருக்காது.

எனவே அப்படியானால், நாம் அப்ப டியே... இப்பொழுது, அவ்வாறு ஆகாதிருக்

கட்டும் (lest), தேவனால் தெரிந்து கொள் ளப்பட்ட ஜனங்கள் மத்தியில் ஒரு எழுப்புதல் இருந்திருக்கிறது தான்; முழு தேசத்தையும் உள்ளே கொண்டு செல்கிற ஒரு உண்மை யான வீசியடித்துக் செல்லும் ஒரு எழுப்புதல் அங்கே இருக்காது, அது ஒரு போதும் இருக்கவில்லை, அது ஒருபோதும் இருக்க வும் செய்யாது.

சீக்கிரத்தில் வெளிப்படும், தேவனுடைய நித்திய இராஜ்யத்திற்கு வழி விட்டுக்கொடுக் கும்படியாக, மற்ற எல்லா இராஜ்யங்களையும் போன்று, இந்த மகத்தான தேசமும் விழ வேண்டியிருக்கிறது.

நாம் நமது தேசத்தை நேசிக்கிறோம், நிச்சயமாக நாம் நேசிக்கிறோம். ஆனால் இன்று அதில் தீட்டு (அசுத்தம்) இருப்பதைக் காணும்போது, அது நம்முடைய இருதயங் களை உடைத்துவிடுகிறது.

~ 7 ~

ஓ, அது பயங்கரமாக உள்ளது. மேலும் அந்த நிலையைக் குறித்து, துர்நாற்றம் தேவ னுடைய நாசியில் ஏறிவிட்டது (reached)...

---

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை.)*



நான் உங்களுக்குக் கூறுகிறேன்,
நீங்கள் தேவனுடைய
ஊழியக்காரர்களுக்கு மரியாதை
செலுத்தும்போது, நீங்கள் தேவனுக்கே
மரியாதை செலுத்துகிறீர்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 56-10-02E தீர்க்கதரிசியாகிய எலிசா

46. இப்பொழுது, கவனியுங்கள். அதன் பிறகு எலியா, இன்னுஞ் சரியாகச் சொன் னால், எலிசா, தான் திரும்பிச் சென்று, கலசத் திலிருந்த (cruse) கொஞ்சம் உப்பைக் கொண்டு, கசப்பான தண்ணீரை தித்திப்பாக ஆக்கினான். ஓ, அற்புதங்கள் அப்படியே எல்லாவிடங்களிலும் பறந்து கொண்டிருந்தன.

47. அதன்பிறகு அங்கே ஒரு... ஓ, அவ னுக்கு ஒரு... இப்பொழுது ஞாபகம் கொள் ளுங்கள், அவனுக்கு கோபமும் கூட இருந்தது.

அவனுக்கு வழுக்கைத்தலை இருந்த காரணத்தினால், சில பிள்ளைகள் அவனைப் பார்த்து கேலி செய்தார்கள்.

உடனே அவன் அந்தப் பிள்ளைகளைச் சபித்தான், அது அதிகமாக பிள்ளைகளின் நிமித்தமாக அல்ல; தேவனுக்கு மரியாதை செலுத்தும்படியாக, தங்களுடைய பிள்ளை களை வளர்க்காமல் இருந்த அந்தப் பெற் றோர்களின் நிமித்தமாக அது அவ்வாறு நடந் தது. அதுதான் அதுவாக இருந்தது.

அந்தப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளை களை இழந்தார்கள், ஏனென்றால் இரண்டு பெண்கரடிகள் அந்தப் பிள்ளைகளில் நாற் பத்திரண்டு பேரைக் கொன்றுபோட்டது; நிச்சயமாக நூறு அல்லது அதற்கும் அதிக மான பிள்ளைகள் எலியாவுக்கும் பின்னால் ஓடி வந்திருப்பார்கள்.

அவன் சமாரியா வழியாகப் போய் கொண்டிருந்தான், அங்கே நீண்ட காலமாக வார்த்தையானது அவர்களுக்குப் பிரசங்கிக் கப்பட்டிருந்தது, மேலும் இந்தத் தீர்க்கதரிசி...

ஆனால் அங்கே ஏதோவொன்றை நீங்கள் காண்கிறீர்களா? அது தேவனுடைய செய்தியாளனைப் பற்றிய ஜனங்களுடைய மனப்பான்மையாக இருக்கிறது.

48. இந்த உலகத்திலே எப்பொழுதாவது தேவனுடைய செய்தியாளன் மத சம்பந்தமான மனிதர்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் பட்டது கிடையவே கிடையாது.

அது எப்பொழுதாவது இருந்ததா என்று வார்த்தையில் எனக்குக் காட்டுங்கள் பார்க்க லாம். கிடையவே கிடையாது.

பெயரளவிலான சபை, ஆதிகால துவக்கம் முதல் தொடங்கி, தேவனுடைய செய்தி ஒவ்வொரு முறையும் புறக்கணிக் கப்பட்டே வந்திருக்கிறது.

இன்றும் அதற்கு எந்த குறைவான காரி யத்தையும் அது செய்யும் என்று உங்களால் எதிர்பார்க்க முடியாது.

49. இயேசு வந்தபோது, அவர் புறக் கணிக்கப்பட்டார். அவர், “உங்களுடைய... எவன் ஒருவன், உங்களுடைய, அல்லது உங்கள் பிதாக்களில் எவன் தீர்க்கதரிசிகளை கல்லால் எறியாமல் இருந்தான்? எவன் தீர்க்கதரிசிகளைப் புறக்கணிக்காமல் இருந் தான்?” என்று கேட்டார்.

50. இப்பொழுது, இங்கே இந்தச் சிறு கதையைப் பாருங்கள்.

வரிகளுக்கு இடையே வாசியுங்கள் (எனக்கு அது பிடிக்கும், உங்களுக்கும் இல் லையா?), வரிகளுக்கு இடையில்.

ஏன், வெளியே போய்க் கொண்டிருந்த இந்தச் சிறு பிள்ளைகள், வழுக்கைத் தலையாக இருந்த இந்தப் பிரசங்கியாரைப் பார்த்து, கேலி செய்து கொண்டிருந்தன.

அவைகள் அவனைப் பார்த்து என்ன சொன்னார்கள் என்று பாருங்கள்: "வழுக்கைத் தலையா, எலியாவைப் போன்று நீ மேலே போகவில்லையா?" என்று அந்தப் பிள்ளைகள் கூறினர்.

எலியா மேலே போனான் என்று அவர்கள் நம்பவில்லை, அவர்கள் அதை சந்தேகித்தார்கள்.

51. அவர்களுடைய ஆசாரியர்களும் அவர்களும் அவர்களிடம் கூறியிருந்தார்கள், அவர்கள் அநேகமாக, "ஓ, அவன் மேலே போகவில்லை. அது கொஞ்சம் மதவெறித் தனம் தான். அவன் அபிஷேகம் பண்ணப்

பட்ட அதே அபிஷேகத்தைக்கொண்டு இந்த ஆசாமி அபிஷேகம் பண்ணப்பட்டான் என்று எதிர்பார்ப்பதா. ஓ, அது முட்டாள் தனம். இவனையும் மேலே போகும்படி இவனிடம் சொல்லுங்கள்" என்று கூறியிருந் திருப்பார்கள்.

52. இதோ அந்தச் சிறு குழந்தைகள் போகிறார்கள். "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை வளர்த்து ஆளாக்கு." பெற்றோர்கள் அதை விசுவாசி யாத காரணத்தினால், இதோ அந்தப் பிள்ளை கள் போகின்றன.

53. **நீங்கள், நீங்களே கூட போகாமல் இருந்துவிட்டு, உங்களுடைய பிள்ளைகள் ஞாயிறு பள்ளிக்கு போக வேண்டுமென்றும், கர்த்தரைச் சேவிக்க வேண்டுமென்றும் உங்களால் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?**

**நீங்கள் ஒன்றுமே இல்லாமல் இருக்கும் போது, உங்களுடைய பிள்ளைகள் ஏதோ வொன்றாக இருக்கும்படி உங்களால் எப்படி எதிர்பார்க்க முடியும்?**

அது சற்று மூர்க்கத்தனமாகவும் எந்த மரியாதையும் காண்பிக்காமல் இருப்பதாகவும் இருக்கிறது, ஆனால் நான் அதை அந்தவித மாகக் கூறும்படி கருதவில்லை; ஆனால் நான் அதைக் கூறும்படி, அவர் என்னைக் கொண் டிருந்தார், எனவே நான்... இது முன்கூட்டியே தியானிக்கப்பட்டதல்ல. சரி. ஆனால் அது... நீங்கள் ஒன்றுமில்லை என்று நான் கூறக்கருத வில்லை, ஆனால் நீங்கள் எந்த வேலை யையும் செய்யாதிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும்போது, அதைத் தான் நான் சொல்லவருகிறேன்.

**நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக, அப்படிப்பட்ட ஒரு மாதிரியை வைத்திருக்கும்போது, அவர்கள் நீதிமான்களாக இருக்கும்படி உங்களால் எவ்வாறு எதிர் பார்க்க முடியும்? உங்களால் எவ்வாறு அதைச் செய்ய முடியும்?**

**அவர்களுக்கு இருக்கும் மிகச் சிறந்த மாதிரி நீங்கள்தான். அவர்கள்... அதைப் பார்க்கும்போது, அவர்கள் உங்களைத் தான் பார்க்கப் போகிறார்கள்.**

**வேறு யாரையும் அவர்கள் பார்க்க மாட்டார்கள், ஏனென்றால் உங்களுடைய சுபாவம் தான் அவர்களுக்குள் இருக்கிறது.**

54. சாத்தானைப் போன்று, மனிதர்களைக் குறித்து மிக அதிகமாக அவனுக்குத் தெரியும்.

அவன் தேவனிடம், யோபிடம் சொன்னான், அவன், “ஒரு மனிதன் தன்னுடைய தோலுக்காக என்னத்தைக் கொடுப்பான்?” என்று கூறினான். நிச்சயமாக. மனிதனுடைய சுபாவத்தைக் குறித்து அவன் ஏதோ அறிந்தவனாகத்தான் இருக்கிறான். அதை தாறுமாறாக்கி (தவறான வழியில் திருப்புவதற்கு) அவன் துணை செய்தான். அவனுக்குத் தெரியும்... அவன் அதில் ஒரு கையை வைத்திருந்தான். அதைக் குறித்து அதிகமாக அவனுக்குத் தெரியும்... எவ்வாறு என்று அவன் இன்னும் அறிந்திருக்கிறான். ஜனங்களை விழப்பண்ண என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தெரியும். மனிதனுடைய சுபாவத்தை அவன் அறிந்திருக்கிறான்.

55. உங்களை அதினிமித்தமாக விழும்படி செய்ய உங்களுக்கு முன்பாக எதைக் காண்பிக்க வேண்டுமென்று... அவனுக்குத் தெரியும்.

விஸ்கி மதுபானத்தின் மணத்தை எவ்வளவு நன்றாக வைக்க வேண்டுமென்றும், ஒரு சிகரெட்டை (புகைக்கும்படி) வைக்க, எவ்வளவு ஆசைகளைத் தூண்டி, அதை அடையும்படி, விடாது ஏங்க வைக்க வேண்டுமென்றும், வாலிப பையனோ சிறு பெண்ணோ, தங்கள் டீன்ஏஜ் வயதில், பீர் மதுபானத்தை குடிக்கும்படியாக, அவர்களை இங்கு வெளியே ஒரு-ஒரு இடத்தில் எப்படி நன்றாக வைப்பது என்றும் அவனுக்குத் தெரியும்.

ஒரு சில வருடங்கள் கழித்து, (அவர்கள்) அந்தப் பழைய பைத்தியம் பிடித்த கண்களை உடைய அருவருக்கத்தக்க தோற்றமுள்ள விகாரமான கிழவிகளாக இருக்கும் அந்தப் படத்தை பார்க்கும்படி (வைக்க) அவன் முயற்சிக்கவே மாட்டான். அது சரியே.

56. முழுமையாக நிர்வாணமாக இருக்கும் ஒரு பெண்ணின் படத்தை வைப்பதில் அவன் சாகசம் செய்ய மாட்டான், ஆனால் அவளைக் கவர்ச்சியானவளாக ஆக்கும்படி எவ்வளவு துணிகளை அவளை விட்டு எடுத்துப்போட வேண்டுமென்று அவனுக்குத் தெரியும். நிச்சயமாக அது அவனுக்குத் தெரியும்.

57. அவனுக்கு மனிதனுடைய சுபாவம் தெரியும்.

உங்களை அதற்குள்ளாக எவ்வாறு பிடிப்பது என்றும் கூட அவனுக்குத் தெரியும்.

அவன் இரவும் பகலும் விழித்திருந்து, கெர்ச்சிக்கிற சிங்கம்போல், எவனை விழுங்கலாமோ என்று சுற்றித்திரிகிறான்.

நிச்சயமாக, அவன் அவ்வாறு தான் இருக்கிறான். எனவே அதை எவ்வாறு செய் வது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது.

58. ஆனால் தேவன் திரும்பிப் பார்த் தார், அவர் எலிசாவுக்குள் இருந்தார், அவன் (எலிசா) அந்தப் பிள்ளைகளை சபித்தான், உடனே காட்டிலிருந்து வெளியே ஓடிவந்த கரடிகளால், அவர்களில் 42 பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள், அந்தப் பிள்ளைகளில் 42 பேரை அவைகள் கொன்று போட்டன, ஏனென்றால் அவைகள் கீழ்ப்படியாதவை களாக இருந்தன, அந்தப் பிள்ளைகள் தவ றான விதமான வீட்டில் வளர்க்கப்பட்டிருந் தன, தேவனுடைய தீர்க்கதரிசிக்கு மரியாதை செலுத்துவதற்குப் பதிலாக, தேவனுடைய தீர்க்கதரிசியை கேலி செய்யும்படி, அவைக ளுக்கு தவறாகப் போதிக்கப்பட்டிருந்தது (கற் பிக்கப்பட்டிருந்தது).

நான் உங்களுக்குக் கூறுகிறேன், நீங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு மரியாதை செலுத்தும்போது, நீங்கள் தேவனுக்கே மரி யாதை செலுத்துகிறீர்கள்.

நீங்கள் கிறிஸ்துவுக்கு மரியாதை செலுத் தும்போது, நீங்கள் தேவனுக்கே மரியாதை செலுத்துகிறீர்கள்.

59. இப்பொழுது, யார் தேவனுடைய பெரிய ஊழியக்காரர்? இங்கே பூமியின் மேலுள்ள ஏதோவொரு மனிதன் அல்ல. அது பரிசுத்த ஆவியானவரே. அவரைத் தான் நீங்கள் பரிகாசம் பண்ணுகிறீர்கள்.

அவரைப் பார்த்து தான் ஜனங்கள் நகைத்து, "இப்பொழுது, அந்த ஜனங்களைப் பாருங்கள். அவர்கள் வேடிக்கையாக நடந்து கொள்ளவில்லையா? அவர்கள் கொஞ்சம்

பைத்தியமாகத்தான் இருக்கிறார்கள் என்று நம்புகிறேன்” என்று கூறுகிறார்கள்.

நீங்கள் அவ்வாறு செய்யும்போது, நீங்கள் தேவனைத்தான் பரிகாசம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். அது சரியே.

அப்போது நீங்கள் மன்னிக்க முடியாத பாவத்தைச் செய்வீர்கள் (unpardonable sin); அது இம்மையிலும் அல்லது மறுமையிலும் ஒருபோதும் மன்னிக்கப்படவே மன்னிக்கப் படாது.

அதற்கு விரோதமாக நீங்கள் ஒரு வார்த்தை பேசினாலும், அது ஒருக்காலும் மன்னிக்கப்படாது என்று இயேசு கூறியிருக்கிறார்.

---

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை.)*

பெற்றோர்களே, நான் இதை உங்களுக்குக் கூறுகிறேன், நான்... நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக சரியான விதமான வீட்டை வைத்திருங்கள். செய்ய வேண்டிய காரியம் அதுதான்.



## சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: தேவனால் அருளப்பட்ட பாதை, 53–1201

12. மேலும் சிலசமயங்களில் அது ஓ, ஒருவிதத்தில் கடினமாக இருக்கிறது, ஆனால் அது உங்களுக்கு நன்மை செய்யும். ஆமாம்.

அது என்னை இரட்சித்தது, அது இப்பொழுது இந்த எல்லா 23 வருடங்களும் என்னை சந்தோஷமாக வைத்திருக்கிறது, நான் இயேசு கிறிஸ்துவுக்குள் மிகவும் சந்தோஷமாயிருந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணி வருகிறேன்.

மேலும் நான்... என்னுடைய ஜீவியத்தில் எனக்கு ஒரே ஒரு வருத்தம் தான் உள்ளது: அது என்னவென்றால், நான் ஒரு சின்னஞ்

சிறிய குழந்தையாக இருந்த போதே, என்னுடைய பாவங்களை மன்னிக்கும் இயேசு கிறிஸ்துவை அறியாமல் போய் விட்டேனே என்பதுதான்.

13. பெற்றோர்களே, நான் இதை உங்களுக்குக் கூறுகிறேன், நான்... நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக சரியான விதமான வீட்டை வைத்திருங்கள். செய்ய வேண்டிய காரியம் அதுதான்.

ஏனென்றால், நான் வளர்ந்த போது, எனக்கு ஒரு கிறிஸ்தவ வீடு இருந்திருக்குமென்றால், அநேகமாக நான் இன்றிரவு கர்த்தராகிய இயேசுவோடு கூட அதிக பக்கத்தில் இருந்து, இன்னும் அதிக ஜனங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள்; ஆனால் என்னுடைய ஜனங்களோ ஒரு பக்தியுள்ள குடும்பமாக இருக்கவில்லை.

தேவனோ ஆச்சரியமான கிருபையினால் என்னை இரட்சித்தார்.

அப்போது, அது முதற்கொண்டு நான் அவர்களில் அநேகரை கர்த்தரிடம் வழி நடத்தியிருக்கிறேன்.

நான் எனது தாயாருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்; என்னுடைய தகப்பனார் தம்முடைய இருதயத்தை கிறிஸ்துவுக்குக் கொடுத்து, என்னுடைய கரங்களில் இருந்த வாறே மரித்துப் போனார்.

என்னுடைய தாத்தா, நான் அவருக்கு ஏறக்குறைய 90 வயதில் அந்த ஆற்றில் ஞானஸ்நானம் கொடுத்தேன்; என்னுடைய சகோதரர்கள் சிலருக்கும் மற்றவர்களுக்கும் நான் (ஞானஸ்நானம் கொடுத்தேன்).

மேலும் எல்லாரும்... என்னுடைய சிறு... இங்கேயிருக்கும் என்னுடைய சிறிய மகன், அதன்பிறகு என்னுடைய சிறிய மகளுக்கு

ஏழு வயதாக இருந்தது. என்னுடைய வேறொரு மகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க அவள் இன்னும் மிகவும் குழந்தையாக இருக் கிறாள்; அவளுக்கு இரண்டு வயது மட்டுமே ஆகிறது.

எனவே அவள் உயிர்வாழ்வாள் என் றால், ஏன், ஞானஸ்நானம் பண்ணப்பட அவ ளுக்குப் போதிய வயது ஆகும்போது, நான் அவளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பேன் என்று நம்புகிறேன்.


எனவே அவள் ஏற்கனவே கர்த்தரிடத் தில் ஒப்புவிக்கப்பட்டு விட்டாள், அல்லது நாங்கள் அதை "பிரதிஷ்டை செய்தல்" என்று அழைக்கிறோம்.

எனவே நாங்கள் அப்படியே அந்தக் குழந்தையை கர்த்தரிடம் பிரதிஷ்டை பண்ணி விட்டோம்.

எங்களால் கூடுமான வரையில் அவ்வ ளவு நெருக்கமாக வேதவாக்கியத்தைப் பின் பற்றவே முயற்சிக்கிறோம்.

14. கிறிஸ்துவோ, அல்லது வேதாகமத்தில் எந்த இடத்திலுமோ, அவர்கள் எப்பொழு தாவது குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்த இடத்தை நாம் ஒருபோதும் காண் பதில்லை. அவர்கள் வெறுமனே குழந்தை களை கர்த்தரிடம் கொண்டு வந்தார்கள், நம் மால் கண்டுபிடிக்க முடிகிற ஒரே வேதவாக் கியம் அதுதான். அவர் தமது கரங்களில் அவர்களைத் தூக்கி அவர்களை ஆசீர் வதித்து, “சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வரு கிறதற்கு இடங்கொடுங்கள்” என்றார். நீங் களோ அவர்களை தெளித்து, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க விரும்புகிறீர்கள், அது சரி.

சூசன்னா வெஸ்லியைக் குறித்து நினைக்கிறேன்.
அவளுக்கு 17 பிள்ளைகளென்று நினைக்கிறேன். அது சரியென்று நினைக்கிறேன்.
ஆனால் அவள் இரண்டு அல்லது அதிகமான மணி நேரம் ஒவ்வொரு நாளும் ஜெபிக்க நேரம் உண்டாக்கிக் கொண்டாள்.




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-11-14 செல்வாக்கு

---

26. இப்பொழுது. இந்த வாலிபன், உசியா, இராஜாவாயிருந்தான். அவன் மந்தை மேய்க்கும் பையனாயிருந்தான்; அவனுக்கு வெளிப்புற காட்சிகள் மிகவும் பிடிக்கும். உசியாவின் ஜீவியத்தின் செல்வாக்கு ஏசாயாவின் ஏசாயாவின் ஜீவியத்தை பற்றிக் கொண்டதாயிருந்தது. ஏசாயாவும்கூட ஒரு வாலிபன், ஒரு வாலிப தீர்க்கதரிசியாயிருந்தான். நீங்கள் அந்தக் கதையை வாசித்திருக்கிறீர்கள். உங்களுக்கு வேண்டுமானால் நீங்கள் 2 நாளாகமம் 26ஐ வாசியுங்கள், அது உங்களுக்கு சொல்லும். எப்படி அவன் தன்னுடைய 16வது வயதினில், அவ னுடைய நீதிமானாகிய தகப்பன் மரித்த பின்பு, அவர்கள் அவனை எடுத்து இஸ்ர

வேலின்மேல் இராஜாவாக ஆக்கினார்கள். 16 வயதினில் அவன் ஆட்சி புரிய ஆரம்பித்தான்.

அவனுடைய பெற்றோரின் ஜீவியத்தின் செல்வாக்கு (Influence) அவன் மேல் இருக்கின்றதை கண்டான்.

அவனுக்கு முன்பாக அவனுடைய தாய் ஒரு தெய்வ பக்தியுள்ள ஸ்திரியாயிருந்தாள்.

அவனுடைய தகப்பன் ஒரு தெய்வ பக்தியுள்ள மனிதனாய் இருந்தான்.

அப்படி இருந்ததினால் அந்த செல்வாக்கு (Influence) அந்த பிள்ளையின் பேரில் அமர்ந்து சரியானதை நடக்கும்படி செய்தது.

27. நான் உங்களுக்குச் சொல்லுவேன். நான் நினைக்கிறேன் இன்றைக்கு தேசமுழுவதுமாக இளம் பிள்ளைகளின் குற்றங்கள் அவ்வளவு அதிகமாய் இருக்கிறது. ஆனால், உண்மையாக, நான் நினைக்கிறேன். அது வீட்டில்தான் துவங்கி இருக்க வேண்டும் என்று. பெற்றோர்கள் அதை அப்படியே விட்டு விட்டிருப்பார்களென்று நான் நினைக்கிறேன்.

அந்த பிள்ளை மட்டும், ஒரு நல்ல, பழையவிதமான, தெய்வீக வீடாய் இருக்குமாயின், நான் தேச முழுவதுமாக என்று சொல்ல மாட்டேன். நிச்சயமாக இல்லை. ஆனால் அது அந்த பிள்ளைக்கு சரியான விதமான செல்வாக்கை கொடுத்திருக்கும்.

நான் நினைக்கிறேன். அநேக நேரங் களில் வீடுகளில் தான் பிள்ளைகளை தவறாக வளர்க்கிறார்கள். தங்களிஷ்டப்படி வீதியில் திரிய விடுகிறார்கள்.

அவர்களுடைய தாயானவள் அல்லது தகப்பன் மது அருந்தும் கடையில் இருக்கும்போது, அந்த பிள்ளை தன்னைத் தானே நடத்திக் கொள்ளுகிறது.

இந்த பிள்ளையைக் குறித்து அக்கரை எடுப்பது கிடையாது.

இன்னொரு காரியம், அந்த பிள்ளையை எடுத்து அதை நேசிப்பது கிடையாது.

அதனிடம் பாசங்காட்டுவதில்லை.

அது வாலிபமாய் இருக்கிறது. நேசமும் மரியாதையும், அதற்கு சொல்லித்தர வேண்டும். வேதம் வாசிக்க சொல்லிதர வேண்டும்.

28. சூசன்னா வெஸ்லியைக் குறித்து நினைக்கிறேன்.

அவளுக்கு 17 பிள்ளைகளென்று நினைக் கிறேன். அது சரியென்று நினைக்கிறேன்.

ஆனால் அவள் இரண்டு அல்லது அதிகமான மணி நேரம் ஒவ்வொரு நாளும் ஜெபிக்க நேரம் உண்டாக்கிக் கொண்டாள்.

அவளுடைய சின்ன ஆடையின் ஓரத்தை சுற்றிலும், அந்த பையன்கள் சுற்றிலும் முழங்காலில் இருந்தார்கள்.

அவர்களுக்குள்ளிருந்து உண்டாக்கப் பட்டது தான் ஒரு ஜானும் ஒரு சார்லசும். அவர்கள் தான் உலகத்தின் போக்கை மாற்றி, அந்த நாளில் உலகத்தை இரட்சிப் புக்குள் ஆக்கினவர்கள்.

அவளுக்கு ஆடைகளை துவைக்கவும், உலர வைக்கவும் இயந்திரங்கள் உண்டா யிருந்ததில்லை.

இன்றைக்கு நமக்கு இருப்பது போன்று பாத்திரங்கள் கழுவ இயந்திரம், இன்னும் மற்றவைகள், ஒரு வேலைக்காரி அவ ளுக்கு இல்லை.

அவளாகவே தான் எல்லா வேலை களையும் செய்ய வேண்டியவளாய் இருந்தாள். இருந்தபோதிலும் அவளுக்கு நேரம் இருந்தது.

ஏனென்றால் சில பிள்ளைகளின் மேல் அவளுடைய ஜீவியத்தின் செல்வாக்கானது இருந்தது. அது முடிவிலே உலகத்தின் போக்கையே மாற்றி விட்டது. நான் நினைக்கிறேன் அதுதான் பழங்காலத்து தாய், பழங்காலத்து வீடு, ஜெபமும் வேதத்தை அறிந்து கொள்ளுதலும் அங்கே இருந்தது.

29. நான் நினைக்கிறேன், ஆபிரகாம் லிங்கென், தன்னுடைய பருவம் வரும் வரைக்கும் தனக்கே சொந்தமாக ஒரு புத்தகத்தையும் உடையவனாயில்லை. ஆனால் வேத புத்தகமும், பாக்ஸின் இரத்த காட்சிகளின் புத்தகம் (Foxe's books of Mantrys) என்று நான் நினைக்கிறேன். ஒரு வேளை..... மோட்சயாத்திரை (Pilgrim progress) புத்தகம் என்று நினைக்கிறேன்.

அதையும் வேதாகமத்தையும் (Pilgrim progress) உடையவராயிருந்தார். பாருங் கள் அது எந்தவிதமான குணவானை உருவாக்கிற்றென்று.

30. நான் திடீரென்று உங்கள் வீட்டுக் குள் வந்து நீங்கள் எந்தவிதமான படங் களை உங்கள் வீட்டு சுவரில் மாட்டி யிருக்கிறீர்கள் என்று நான் பார்க்கட்டும். நான் உங்களை வீடுகளுக்கோ அல்லது அலுவலங்களுக்கோ போய் எந்தவிதமான இன்னிசையை கேட்கிறீர்கள் என்று பார்க்கட்டும். புரிகின்றதா? நீங்கள் என்ன படிக்கின்றீர்கள், நீங்கள் எதை நோக்கிப் பார்க்கிறீர்கள், இதைக் கொண்டு உனக் குள்ளாக என்ன இருக்கின்றது என்பதை என்னால் சொல்ல முடியும், ஏனென்றால் இவைகளால் தான் அது போஷிக்கப் படுகின்றது. புரிகின்றதா? நாம் மட்டும்

நம்முடைய வீடுகளை சற்று நன்றாக வைத்துக் கொள்வாவோமானால் நம்முடைய பிள்ளைகள் ஓடிப் போக விரும்ப மாட்டார்கள். காரியங்களை அவர்களுக்காக அதிகமாக்குங்கள், அவர்களுக்கு ஒரு நல்ல வரவேற்பு வீடாய் இருக்கும்படியாய் ஒரு நல்ல வசதியான வைத்துக் கொள்ளுங்கள். அப்படியானால் எப்பொழுது வீட்டிற்கு போவோம் என்று காத்துக் கொண்டிருப்பார்கள். அந்த விதமாகத்தான் ஒரு வீடு இருக்க வேண்டும்.

31. அவ்விதமான ஒரு வீட்டினில் தான் உசியா வளர்க்கப்பட்டிருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். தெய்வ பயமுள்ள பெற்றோர்களுடைய ஜீவிய செல்வாக்கின் (Influence) காரணமாகத் தானிருக்கவேண்டும். அவன் இராஜாவாக ஆக்கப்பட்டவுடனே, எல்லா புகழ்

கருத்துக்களை, அரசியல் வித்தியாசங்களையும் அவன் ஒதுக்கி விட்டு, அவனுடைய மனதை ஒரு காரியத்தின் மீது வைத்தான். அதாவது எப்படியாயிருந்தாலும் சரி, தேவனுக்கு சேவை செய்ய வேண்டும். இப்படிப்பட்டதான அரசியல் வாதிகள் பலர் நமக்கு தேவையாய் இருக்கிறது. தான் தேவனுக்கு சேவை செய்யப் போகிறேன் என்பதை அவன் தீர்மானித்தவனாய் இருந்தான். ஏனென்றால் அந்த விதமாகத்தான் அவன் வளர்க்கப்பட்டான். அவன் தேவனுக்கு சேவை செய்து ஜீவிக்கும்படியாக, அவனுடைய தகப்பனுடைய ஜீவியம் சரியானதொரு செல்வாக்கை (Right Influence) அவனுக்குக் கொடுத்தது.

சில நேரங்களில் அவன் அதிலிருந்து விலகக்கூடும். ஆனால் அதுவோ அவனைவிட்டு விலகாது, பாருங்கள். அது எப்பொழுதும் அவனுடன் தங்கியிருக்கும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 58-09-27 நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல?

2. சகோ. ஜெஃப்ரீஸ், உங்கள் கைகளை குலுக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது, இசைக்கருவி வாசிப்பதைக் கேட்கவும், உங்கள் மகன் அந்தப் பாடலைப் பாடுவதைக் கேட்கவும் மிகவும் நன்றாயிருந்தது.

தந்தை-மகன் இணைந்து செய்வது, அது எனக்கு பிடிக்கும். உங்களுக்கும் அது பிடிக்கும் அல்லவா?

“பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து.” அது உண்மை.

திரு.குந்தர், அது உண்மையென்று உங்களுக்குத் தெரியும், உங்கள் இருவருக்கும், பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான். அது உண்மை.

சில நேரங்களில் அவன் அதிலிருந்து விலகக்கூடும். ஆனால் அதுவோ அவனை விட்டு விலகாது, பாருங்கள். அது எப்பொழுதும் அவனுடன் தங்கியிருக்கும்.

சிறு வயதில் அவனுக்குக் கிடைக்கப் பெற்ற பயிற்சியும், அவன் வளரும் போது அளிக்கப்பட்ட யாவும், அவனுடன் நிச்சயமாக தங்கியிருக்கும்.

# ஓ, நீங்கள் எப்படியிருக்கிறீர்களோ, அப்படித்தான் உங்கள் குடும்பமும் இருக்கும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-10-13 வேறொருவரால் விளையும் பாதிப்பு

26. இப்பொழுது, இப்பொழுது, அந்த இளைஞன் சிங்காசனத்தில் அமர்ந்தான் என்று நாம் காண்கிறோம். சில வேத வசனங்களை நீங்கள் குறித்துக் கொள்ள விரும்பினால், அது II நாளாகமம் 26-ம் அதிகாரம்.

அவனுடைய தகப்பனாகிய அமத்சியா மரித்த பிறகு - அவன் நீதிமானாயிருந்து அதன் பிறகு கர்த்தரைவிட்டு விலகி தன் சொந்த ஜனங்களால் கொல்லப்பட்டான் - அவனுடைய இடத்தில் உசிக்கியா - இல்லை, உசியா - ராஜாவாக அமர்ந்தான்.

அவனுக்கு பதினாறு வயதானபோது, அவன் ராஜாவாக அபிஷேகம் பண்ணப் பட்டு, சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டான்.

அவன் அப்பொழுது ஒருபையன், ஆனால் நன்றாக ஆட்சி புரிந்தான்.

**அவனுக்கு தேவனுக்கு பயந்த தகப்பனும் தாயும் இருந்ததாக வேதம் கூறுகிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் வளர்ந்தவன் தேவனுக்கு பயந்த பையனாகவே வளர்ந் திருக்க வேண்டும். ஏனெனில் அவனுக்கு முன்னால் எப்பொழுதும் இருந்தது அது ஒன்றே.**

27. நான் நினைப்பது என்ன தெரி யுமா? ஒவ்வொருவருக்கும் அவரவர் கருத்து இருக்கக் கூடும். இந்த தேசம் பெற்ற மிகப் பெரிய ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் என்பது என் கருத்து.

அவர் ரிப்பப்பிளிக்கன் கட்சியை சேர்ந் தவர் என்பதனால் அல்ல, அவர் தேவ பக்தியுள்ள மனிதன் என்பதனால் அவர் தேவனைச் சேவிப்பதற்கென்றே வளர்க்கப் பட்டார்.

**அவர், "நான் யாருக்காவது புகழை செலுத்த விரும்பினால், அது என் தேவபக்தி யுள்ள தாயாருக்கே. அவர்களுடைய வாழ்க்கை என்னில் பாதிப்பை உண்டு பண் ணினது. எனக்கு ஜெபிக்க கற்றுக் கொடுத்து இயேசு கிறிஸ்துவை என் சொந்த இரட்சக ராக அறிந்து கொள்ளும்படி செய்தவர்கள் அவர்களே" என்றார்.**

**ஓ, நீங்கள் எப்படியிருக்கிறீர்களோ, அப்படித்தான் உங்கள் குடும்பமும் இருக்கும்.**

உங்கள் பிள்ளையை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வளர்க்கிறீர்கள்.

அது தவறான வழியில் செல்வதற்கு உள்ள வாய்ப்பைக் காட்டிலும் சரியான வழியில் செல்ல தொண்ணூற்றெட்டு சதவிகிதம் அதிக வாய்ப்புள்ளது.

**"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்".**

**உங்கள் பிள்ளைகளை சரியான வழி யிலே வளர்த்து, அவர்கள் சரியானவை களைச் செய்ய படித்துக் கொடுங்கள்: அவர் கள் பள்ளிக் கூடங்களில் உள்ள போதும் நேர்மையாகவும் உத்தமமாகவும் இருக்க.**

28. அநேக சமயங்களில் பிள்ளை களுக்கு பரீட்சையில் மற்றவர்களைப் பார்த்து காப்பி அடிக்க வேண்டும் என்னும் எண்ணம் உண்டாகின்றது. இப்படியாக பள்ளிப்படிப்பை முடிக்க அவர்கள்

பிரயாசப்படுகின்றனர். ஆனால் நீங்கள் சொந்தமாக பரீட்சை எழுதி அதை முடித் தால், நீங்கள் நல்ல மார்க்குகள் வாங்கின தைக் குறித்து மகிழ்ச்சியடையலாம்.

நாளைக்கு உங்களுக்கு பரீட்சை இருக்குமானால் இராத்திரி முழுவதும் படிக்காமல் அலைந்து, அடுத்த நாள் காலை எழுந்திருந்து, நான் இன்னார் இன் னார் பக்கத்தில் உட்கார்ந்து கொள்வேன். அவர்கள் கெட்டிக்காரர்கள். அவர்களை பார்த்து காப்பி அடித்திடுவேன் என்று கூறுவது நல்லதல்ல.

காலை உணவு அருந்தும் போது அப்பா ஜெபம் செய்யும் நேரத்தில் நீங்கள் அவரிடம், “அப்பா, இன்று எனக்காக ஜெபியுங்கள். எனக்கு வேதியியல் பரீட்சை

உள்ளது" என்று கூறிடுங்கள். அல்லது அது எதுவாயிருந்தாலும் சரி.

அப்பொழுது அப்பாவாகிய நீங்கள் ஜெபம் செய்யும்போது, "தேவனே, இன்றைய பரீட்சையில் ஜான், மேரி இவர்களை ஆசீர்வதியும் என்கிறீர்கள்". நான் சொல்லுகிறேன், அது போக்கையே மாற்றிவிடும்.

29. ஞாபகம் கொள்ளுங்கள், நாம் விசுவாசத்தோடு கேட்போமானால், நாம் கேட்டதைப் பெற்றுக் கொள்வோம்.

இயேசு, விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். நீங்கள் கேட்காததினால் பெற்றுக் கொள்வதில்லை. நீங்கள் விசுவாசிக்காததனால் கேட்பதில்லை. கேளுங்கள், "அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறை

வாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்'' என்றார். அது எனக்குப் பிரியம்.

**நமது சரியான போதனை: நீங்கள் சரியான காரியத்தை சொல்லுங்கள், சரியான காரியத்தை செய்யுங்கள், சரியான காரி யத்தை சிந்தியுங்கள், எப்பொழுதுமே சரியா னதை சிந்தியுங்கள்.**

**எனக்கு ஒரு சிறு சுலோகம் உண்டு: சரியானதை செய், அது நீ தேவனுக்கு செய்ய வேண்டிய கடமை. சரியான விதமாக சிந்தி, அது உனக்கு உன் மேல் உள்ள கடமை. அப்பொழுது எல்லாம் உனக்கு சரியாக நடந்தே தீர வேண்டும்.**


நீங்கள் ஒரே நேரத்தில் கிழக்கு நோக் கியும் மேற்கு நோக்கியும் செல்ல முடி யாது. அவ்வாறே நீங்கள் ஒரே நேரத்தில் சரியானதையும் தவறானதையும் செய்ய

முடியாது. நீங்கள் எவ்வளவு தான் ஒரு திசையை நோக்கி செல்வதாக நினைத் தாலும், நீங்கள் மேற்கு நோக்கி செல்லாமல் போனால்... நீங்கள் மேற்கு நோக்கி சென்றால் கிழக்கு நோக்கி செல்லவில்லை.

30. எனவே இந்த இளம் ராஜா அவன் இளைஞனாயிருந்த போது அவனுடைய தகப்பனின் வாழ்க்கை அவனில் பாதிப்பை உண்டு பண்ணினது. அவன் தகப்பன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவனுடைய கற்பனைகளைப் போதித்தான்... ஆனால் திடீரென்று அவனுடைய கடைசி நாட் களில் அவன் போக்கு மாறிப்போய், அவன் தேவனுக்கு விரோதமாக போதித் தான். அவனுடைய சொந்த ஜனங்களே... அவன் தன் சொந்த ஜனங்களால் கொன்று போடப்பட்டான். அது உசியாவுக்கு ஒரு நல்ல பாடமாக இருந்திருக்கும். ஆகவே

உசியா சிங்காசனத்துக்கு வந்த போது, அவன் தகப்பன் முன்பு நடந்த வழிகளில் நடந்து, தேவனுடைய காரியங்களை மீண்டும் புகுத்தி இஸ்ரவேல் ஜனங்களை மறுபடியும் தேவனுடைய வழிபாட்டில் கொண்டு வந்தான். அவன் தன்னை பெலப்படுத்திக் கொண்டான்.

உசியா தன் வாலிப நாட்களில் நடந்து கொண்ட விதத்துக்கு நான் எப்பொழுதும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். அவன் அரசியல் தந்திரங்களைக் கைக்கொள்ள வில்லை. அரசியல் அவனுக்கு விரோத மாக இருந்திருக்கக் கூடும். இருப்பினும் அவன் தேவனுடைய வழியில் நிலைத் திருந்தான்.




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 63-11-30B செல்வாக்கு

24. இக்காலையில் நாம் பேசிக்கொண்டிருக்கும் இந்த வாலிபனான உசியா ஏசாயா தீர்க்கதரிசியின் கதாநாயகனாயிருந்தான். உசியாவின் நாட்களில் இந்த இளம் தீர்க்கதரிசியான ஏசாயா வாலிபனாகிய உசியாவை கவனித்துக் கொண்டிருந்தான். ஏனெனில் உசியா ஓர் மகத்தானவனாயிருந்தான், உசியா ஓர் நல்ல குடும்பத்தினின்று வந்தவனாயிருந்தான். அவனுடைய தாயும், தகப்பனும் தேவன் பேரில் உறுதியான விசுவாசம் கொண்டவர்களாயிருந்தார்கள். அவர்கள் தங்கள் பிள்ளையை தேவனை மதிக்கவும் அவரை சேவிக்கதக்கதாகவும் வளர்த்திருந்தார்கள்.

25. அமெரிக்காவிலும், முழு உலகிலும் இன்றுள்ள மிகப் பெரிய குறையென்ன வென்றால், பெற்றோர்கள் தங்கள் பிள்ளை களுக்கு முன்மாதிரியான பக்தியுள்ளவர்க ளாய் இல்லாமலிருப்பதே. இன்றுள்ள பெற்றோர்கள் வார்த்தையின் ஒழுங்கி னின்று விலகிச் சென்று விட்டனர். உல கத்தின் நவநாகரீகத்திற்கு அதிகமாக சென்று விட்டனர். சபைகளும் அதையே தான் செய்து விட்டன. அவ்விதமாக காரியத்தை தளரவிட்டு சபைக்குள் நாம் உலகத்தைக் கொண்டு வந்துவிட்டோம். அதன் காரணமாகத்தான் நாம் இன்று இப்படிப்பட்ட காலத்தைப் பெற்றிருக் கிறோம்.

26. இதை இங்கிருக்கும் வாலிப பிள் ளைகளுக்கு முன்பாக மிகவும் பணிவுடன் கூறுகிறேன். பிள்ளைகள் இன்று தவறான

காரியங்களையும் தவறான நடத்தைகளை யும் அதிகமாகப் பெற்றிருப்பதன் காரணம் அவர்கள் தங்கள் ஆரம்ப நாட்களில் குடும்ப வாழ்வின் சூழ்நிலையில் பெற்றுக் கொண்ட முன்மாதிரியே. "பிள்ளையான வன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" என்ற காரியத்தில் நான் இன்னுமாக விசுவாசியாயிருக்கிறேன் (நீதி 22:6). இந்த வாலிபனாகிய உசியா தன்னை கவர்ந்திருக்கத்தக்கதான பெற் றோர்களின் வழிநடத்துதலில் வளர்ந்து வந்தவனாயிருந்தான்.

27. அமெரிக்கர்களுள் மிக மகத்தான வர் என்று நான் நினைக்கும் இந்த ஆபிர காம் லிங்கனை கவனியுங்கள். எல்லா மதிப்பிற்கும் மரியாதைக்கும் அவர் நிச்சயமாக பாத்திரராயிருந்தார். இன்னும்

அதைக்காட்டிலும் அதிகம் என்றுகூட சொல்லலாம். அவருக்கு இருந்த பலவீன மான பகுதி என்னவென்றால், மணலை தமது எழுது தாளாக பயன்படுத்தி அதின் மேல் எழுதி தனது கல்வியை பயிலு வதைத் தவிர வேறு வழியில்லாதிருந்தது. ஏனெனில் அவர் ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து மோசமான ஆரம் பத்தைக் கொண்டிருந்ததே. அவர் தம் முடைய 21வது வயதுவரை அவருக்கு சொந்தமாக வைத்திருந்த புத்தகங்கள் இரண்டுதானிருந்தது என்று நாமறிகிறோம். அதில் ஒன்று பரிசுத்த வேதாகமம் மற் றொன்று மோட்சப் பிரயாணம் அல்லது பாக்ஃஃஸ் என்பவர் எழுதிய “இரத்தசாட்சி கள்" என்ற புத்தகமே. எந்த புத்தகத்தை மனிதன் படிக்கின்றானோ அதுதான் அவன்

பெற்றுக் கொள்ளக்கூடிய சக்தியாயிருக் கிறது.

28. இன்று நம்மிடையேயுள்ள காரியம் அதுதான். இன்று நமது சந்தைகள் அசிங்க மும், அசுத்தமுமான காரியங்களால் நிறைந்து அவைகளின் மூலம் நமது வாலிபப் பிள்ளைகளின் சிந்தைகளை விஷமாக்கி பின்பு நாம் பிள்ளைகளின் மேல் அந்த பழியை போடுகிறவர்களா யிருக்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் அத்தகைய புத்தகங்களை நமது அலமாரி களினின்று அகற்றும் அளவிற்கு சரியான காரியத்தை செய்ய நிலைநிற்பதில்லை. அத்தகைய காரியங்கள் நம்மைதான் பொறுத்திருக்கின்றது என்பதை நான் அநேக சமயங்களில் நினைப்பதுண்டு. பிள்ளைகள் கவர்ந்திழுக்கப்படத்தக்கதாக நாம் கூட தளர்ச்சியாயிருந்து அத்தகைய

அசிங்கங்கள் நம்முடைய வீடுகளுக்குள் வர அனுமதித்து விடுகிறோம்.

29. ஆனால் இந்த உசியா சரியான விதமாக வளர்க்கப்பட்டவனாயிருந்தான். II நாளாகமம் 26ம் அதிகாரத்தில் அந்த சரித்திரத்தை நீங்கள் படிக்கலாம். அவனுடைய தகப்பனார் மரித்த பின்பு தன்னுடைய 16வது வயதில் அவன் ராஜாவானான். நல்ல பயபக்தியுள்ள பெற்றோரின் பின்னணியைப் பெற்றவனாக தன் ராஜாங்கத்தைத் துவங்கி சரியான காரியம் எதுவோ அதையே அவன் செய்தான். அக்காலத்தின மெச்சத்தக்க அபிப்பிராயங்களுக்கும், அரசியல்களுக்கும் அவன் ஒருபோதும் தன்னை அர்ப்பணிக்காமல் தேவனை சேவித்தவனாயிருந்தான்.

30. புகழ்ச்சியான அபிப்ராயங்களும், அரசியல்களும் எதிர்மறையாக சென்று கொண்டிருந்த நாட்களில் ஒரு மனிதன் எது சரியான காரியமோ அதற்காக நிலைநின்று நேர்பாதையில் செல்பவனாயிருக்கும் போது அத்தகைய நல்ல மனிதனுடைய வாழ்க்கை ஓர் நல் முன்மாதிரியா யிருக்கும்.

31. ஜனாதிபதி கென்னடி கொலை செய்யப்பட்ட பின்பு இன்று நமக்கு வந்திருக்கும் ஜனாதிபதி ஜான்சன் அவர் கள் தனக்காக ஜெபம் செய்யும்படி நாட்டி லுள்ள எல்லா தேவ ஊழியர்களையும் கேட்டுக்கொண்டார். அந்த மனிதனிலிருந்த அச்செய்கைக்காக நான் மெச்சினேன். ஏனெனில் தனக்கு உதவி செய்ய தேவனை அழைக்கிறார் பாருங்கள். அவர் ஒரு விசுவாசியாயிருந்து தேவன் மேல் தன்

நம்பிக்கையை வைத்திருக்கிறார் என்று நான் அறிகிறேன். அத்தகைய மனிதன் தான் நமக்குத் தேவை.




நீங்கள் ஐந்தாவது சுவிசேஷமாக
இருக்கிறீர்கள் என்று, நான்
கருதுகிறேன்

## சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 54-0509 — அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆக்கிரமிப்பு

244 இந்த காலையில் இங்கே எளிமையான தாய்மார்களாய், உண்மை யான தாய்மார்களாயிருந்து வருகிற உங்களுக்கு, உங்களில் அநேகர் அவ்வாறு இருப்பதை நான் அறிவேன்; நீங்கள் ஒவ்வொருவரும் என்றே, நான் நினைக் கிறேன். நான் உங்களுக்கு ஒரு காரியத்தை சொல்லட்டும். தேவன் உங்களை ஆசீர் வதிப்பாராக. நீங்கள் ஐந்தாவது சுவிசே ஷமாக இருக்கிறீர்கள் என்று, நான் கருதுகிறேன். உங்களுடைய பிள்ளைகளுக் காகவே, ஒரு சிறு காரியத்தை, இப்பொ

ழுது நான் என்னவென்று உங்களுக்குச் சொல்லட்டும். காரணம், சகோதரன் நெவில் அநேகமாக இன்றிரவு தாயாரைக்...குறித்ததன் பேரில் பிரசங்கம் செய்வார், அல்லது யாரேனும், எங்களில் ஒருவர், சரி, தாயாரைக் குறித்து, அதைப் பிரசங்கிக்கலாம். ஆனால், கவனியுங்கள், நான் உங்களிடத்தில் ஒன்று கேட்கட்டும்.

245 நினைவிருக்கட்டும், மோசே ஒரு குட்டி பையனாக இருந்தபோது, அவனுக்கு அறிவுரையை வழங்கியது ஒரு தாயாயாயிருந்தது. தேவபக்தியுள்ள ஒரு தாய் அந்த குட்டி மோசேயை எடுத்து தன்னுடைய மடியில் வைத்து, “மோசே,” என்று கூறி, அவனுக்கு எல்லாவற்றையும் கற்பித்தாள். அவன் அவளுடைய ஆசிரியராக இருந்தான், இல்லை, அவள் அவனுடைய ஆசிரியராக இருந்தாள்,

சரியாகக் கூறினால், பார்வோனின் கீழே, “இப்பொழுது இந்த காரியங்கள்” என்று கூறி, “மோசே, என்றோ ஒருநாள் நீ இஸ்ரவேலரை புத்திரரை விடுவிக்கப்போகிறாய். நீயே அதற்கென அழைக்கப்பட்ட பையனாய் இருக்கிறாய். உன்னை சுத்தமாகவும் உலகத்திலிருந்து கறைபடியாமலும் காத்துக்கொள், ஏனென்றால் நீயே அந்த ஒருவனாய் இருக்கிறாய். நீதான் அந்த ஒருவன்” என்று கூறினாள்.

246 மற்ற வேறெந்த இடங்களுக்கும், எப்போதாவது அவன் சென்று எந்த வேதபாட கருத்தரங்கிலாவது, வேறெந்த உபதேசத்திலாவது அவன் எப்போதும் பெற்றுக்கொண்டதேயில்லை என்பதை நாம் அறிவோம். ஒரு அஞ்ஞானியாயிருந்த, பார்வோனுடைய அரண்மனையிலே அவன் தங்கியிருந்தான்; ஆனால்

அவனுடைய தாய் அவனுக்கு கற்பித்தாள். அதுதான் ஒரு உண்மையான தாய். அவள் அவனுக்கு கர்த்தருடைய கற்பனைகளை கற்பித்தாள். அவன் எப்படி பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்பதை அவள் அவனுக்குக் கூறினாள். அவள் அவனுக்கு எப்படி மற்றும் என்னவாக அவன் ஜீவிக்க வேண்டும், மேலும் எப்படி, தேவன் என்ன செய்ய வேண்டும், அவனுக்காக என்ன செய்வார் என்பதை அவனிடத்தில் கூறி னாள். அது மோசேயினுடைய ஜீவிய காலம் முழுவதும் அவனோடு ஒட்டிக் கொண்டது.

247 எந்த நல்ல, உண்மையான, விசுவாசமான தாயும் தன்னுடைய சிறு குழந்தைகளை அழைத்து, அவர்களை படக்காட்சிகள் மற்றும் நடனங்கள், அதை போன்றவற்றிற்கு அனுப்புவதற்கு பதிலாக,

அவள் அவர்களை தன்னுடைய மடியிலே வைத்து அவர்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை குறித்து போதிப்பாள்.

248 இங்கே மற்றொரு நாள், நான் ஒரு தாயாரிடத்தில் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தேன். மேலும் அந்தத் தாயார், "ஓ, சகோதரன் பில்லி" என்று கூறி, அவள், "என்னுடைய பரிதாபமான பையன் பிரச் சினைக்குள்ளாக இருக்கிறான்" என்றாள். "ஓ, அவன் என்னே ஒரு பிரச்சனையில் இருக்கிறான்" என்றாள்.

249 நானோ, "ஆம், அருமையான, சகோதரியே, அதைக் குறித்து எனக்குத் தெரியும்" என்றேன். மேலும் அவள், "அவன் தவறாக இருக்கலாம். எனக்குத் தெரியாது" என்று கூறினாள். "ஒருவர் *இதைக்* கூறுகிறார் மற்றும் ஒருவர் *அதைக்*

கூறுகிறார். எனக்கு தெரியாது. ஆனால்" என்றாள். தொடர்ந்து, "அவன் தவறாய் இருந்தாலும் அல்லது சரியாய் இருந் தாலும் அது ஒரு பொருட்டல்ல, நான் அவனை நேசிக்கிறேன்" என்றாள். அங்கு தான் உங்கள் காரியமே உள்ளது. "நான் அவனை நேசிக்கிறேன்."

250 அவன் தன்னுடைய தாயிடம் கூறினான், "நான் *இதனால்* மற்றும் *அதனால்* மிகவும் வஞ்சிக்கப்பட்டிருக் கிறேன்" என்று கூறினான். "தாயே, நான் உண்மையாகவே பெற்றுள்ள ஒரே இனிய இருதயமாய் நீ இருக்கிறாய் என்று நான் நம்புகிறேன்; எனக்கு உண்மையாய் இருக்கிற ஒரு ஸ்திரியாய், என்னோடு இணைந்திருக்கிறாய்" என்று கூறினான். அதுவே தாயினுடைய அன்பு. அந்த ஒரு உண்மையான தாயே தன்னுடைய

கரங்களை தன்னுடைய குழந்தையைச் சுற்றிப் போட்டுக்கொள்வாள். அவன் சரியாய் இருக்கிறானா அல்லது தவறாக இருக்கிறானா என்பதை பொருட்படுத்தாமல், அவள் தொடர்ந்து செல்கிறாள். மேலும் தேவனால்...ஒரு தாயினால் தன்னுடைய குழந்தையைக் குறித்து அந்த விதமாக நினைக்க முடியுமானால், தேவனால் அவருடையவர்களைக் குறித்து எவ்வளவு அதிகமாக நினைக்க முடியும். உங்களுக்கு புரிகிறதா? நீங்கள் அவரோடு தரித்திருங்கள். தொடர்ந்து தரித்திருங்கள்.

251 நான் முடிப்பதற்கு முன்பாக, வேதாகமத்தில் உள்ள, மற்றொரு தாயைக் குறித்து, உடனடியாக, இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லட்டும். ஏரோதியாள் என்று அழைக்கப்பட்ட ஒரு தாய் இருந்

தாள். அவள் தன்னுடைய குமாரத்திக்கு தாளத்துக்கு ஏற்றவாறு காலடி போட்டு ஆடும் நடனத்தை கற்றுக் கொடுத்தாள். அவள் புகழ் பெற்றவளாய் இருக்க வேண்டும் என்று இவள் விரும்பினாள். அவள் ராஜாவுக்கு முன்பாக நடனமாடி, யோவான் ஸ்நானகனின் தலையைக் கேட்டாள். அவளுடைய எழுபது சந்ததி களைக் குறித்த பதிவு நம்மிடம் உள்ளது, நடனமாடின இந்தப் பெண் (ஏரோதி னுடைய குமாரத்தி), ஏரோதுக்கு முன்பாக நடனம் ஆடினாள்; அவளுடைய சந்ததி களில் எழுபது பேர், அவர்கள் விபச்சாரி களாகவோ அல்லது தூக்கு மேடையிலோ மரித்தனர்.

252 ஒரு தாய் அவளுடையவர்களுக்கு உலகத்தின் காரியங்களைக் கற்பித்தாள்;

மற்றொரு தாயோ அவளுடையவர்களுக்கு தேவனுடைய காரியங்களைக் கற்பித்தாள். ஒருவன் மிகப்பெரிய ஒரு தலைவனாயும் மற்றும் ஒரு ஜெயங்கொள்பவனுமாகி, இன்றைக்கு மனிதருக்கு மத்தியிலே அழிவில்லாதவனாய் இருக்கிறான்; மற்றவளோ ஒழுக்கங்கெட்டு நரகத்தில் இருக்கிறாள், மற்றும் தன்னோடு ஆயிரக்கணக்கானவர்களை அழைத்துச் சென்றாள். நான் என்ன பொருட்படுத்திக் கூறுகிறேன் என்பது புரிகிறதா? “பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து.”

253 உங்களுடைய வெள்ளை ரோஜாக்களோடு இங்கே அமர்ந்திருக்கிற பரிதாபமான தாய்மார்களாகிய உங்களோடு நான் நிச்சயமாகவே அனுதாபப்படுகிறேன். இன்

றைக்கு, ஒரு தாய் சென்றுள்ள ஒரு பர லோகம் ஒன்று உண்டு, அங்கே தேவனுக் காக ஜீவித்த பண்டைய நாகரீகங்கொண்ட ஒரு நல்ல தாய், அநேகமாக திரைக்கப்பால் கடந்து சென்றுள்ளாள். நீங்கள் வருவதற் காக அவள் காத்துக் கொண்டிருக்கிறாள். அது உண்மையே.

254 உங்களுடைய சிகப்பு ரோஜாக் களோடு அங்கே உள்ள உங்களை நான் கனப்படுத்தி மரியாதை செலுத்துகிறேன். உங்களுடைய தாயாருக்கு, நீங்கள் அவ ளுக்காக இந்த காரியத்தை செய்ய வேண்டும் என்று விரும்பினால், ஒரு வருடத்தில் உள்ள முந்நூற்று அறுபத் தைந்து நாட்களும் அதை செய்யுங்கள். அவளுடைய வீட்டுக்கு சென்று, ஜெபத்தை ஏறெடுத்து, தேவனுக்காக ஜீவியுங்கள்.

அதுதான் செய்ய வேண்டிய காரியம். உங்களுடைய பிள்ளைகளை வளருங்கள். உங்களுடைய பிள்ளைகள் வரும்போது, நீங்கள் திரைக்கபால் கடந்து சென்று விட்டப் பிறகு, அவர்களும் உங்களை "ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்று அழைப் பார்கள். அதுவே உண்மையான தாய்மை யின் ஆவியாயும், உண்மையான அன் னையர் தினத்தினுடைய ஆவியாயுமுள் ளது. ஒரு வருடத்தில் உள்ள முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் அன்னையர் தினமாகவே இருக்கிறது.


255 இந்த நாளில் அவர்கள் மலர்களை விற்கிறார்கள் மற்றும் அன்பளிப்புகளை அனுப்புகிறார்கள், உலகத்தார் அதை செய்கிறார்கள். இது கடந்து செல்லுமா னால், உலகம் இன்னும் மற்றொரு இருபது

வருடங்கள் நீடித்து நிலைக்குமானால், அவர்கள் குமாரனுடைய நாட்களையும், குமாரத்தியினுடைய நாட்களையும், மற்றும், உறவினருடைய நாட்களையும், மற்றும் மாமாவினுடைய நாட்களையும், அதைப் போன்று அவர்கள் எல்லா காரி யங்களையும் உடையவராய் இருப்பார்கள், அதுவே உலகமானது ஒரு வணிக கவர்ச்சி யில் கொண்டு செல்வதற்கு போதுமான தாகும். அது எங்கே போய்க்கொண் டிருக்கிறதென்றால், நேராக நரகத்திற்கு, அதனால் போக முடிந்த அளவு கடினமாக அழிவிற்கு சென்றுகொண்டிருக்கிறது.

ஆனால், உங்களை, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக என்பதே, என்னுடைய ஜெபமாயுள்ளது. நாம் ஜெபம் செய்வோம்.



அதற்கு அவனோ, "அப்பா, நான் உங்களுடைய அடிச்சுவடுகளையே பின் தொடர்ந்து வர முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்" என்றானாம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: இங்கே உனக்கு என்ன காரியம்?, 59-0301 E

8. சில ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த ஒரு பழைய சம்பவம், அதாவது இங்கிலாந்தில் ஒரு மனிதன் இருந்தானாம். அவன் கிறிஸ்துமஸ் நேரத்தின்போது வெளியே சென்று ஒரு சிறு நட்பின் ஐக்கியத்திற்காக மது அருந்தலாம் என்று எண்ணினானாம். அப்பொழுது அவன் தன்னுடைய அயலகத்தார் மத்தியில் சென்று, தன்னுடைய அன்பளிப்புகளைப் பரிமாறிக் கொண்டிருக்க, அப்பொழுது ஒவ்வொருவரும் அவனிடத்தில், “ஜான், இப்பொழுது இந்த மதுவிலிருந்து சற்றுப் பருகு” என்று கூறினராம். எனவே இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமும் சிறுக

சிறுக குடித்தபடியால், அவன் உண்மை யாகவே போதை கொண்டவனானான்.

9. அப்பொழுது அவன் வீட்டிற்கு வீதியில் திரும்பி வந்து கொண்டிருந்த போது, சுமார் ஆறு அங்குல கன அளவுகொண்ட பனிமழை உண்டாயிருந் ததாம். அவனுடைய சிறு பையன் அவனைப் பின்தொடர்ந்து வந்து கொண் டிருந்தானாம். இவனால் தன்னுடைய மகனை அழைத்துச் செல்ல முடியவில்லை யாம். எனவே வீட்டிற்கு தன்னுடைய வீதி வழியாக செல்லும்போது, அவன் தற்செய லாக திரும்பி தன்னுடைய சிறு பையன் பனிமழையில் புரளுவதைக் கவனிக்க நேர்ந்ததாம். அப்பொழுது அவன், “மகனே, நீ ஏன் பனி மழையில் புரண்டு கொண்டிருக்கிறாய்?” என்று கேட்டானாம்.

10. **அதற்கு அவனோ, "அப்பா, நான் உங்களுடைய அடிச்சுவடுகளையே பின் தொடர்ந்து வர முயற்சித்துக் கொண்டிருக் கிறேன்" என்றானாம். அப்பொழுது அவன் அந்த சிறுவனை தன்னுடைய கரங்களால் தூக்கியெடுத்து, "தேவனே, இந்நாள் முதற் கொண்டு நான் ஒரு போதும் மது அருந்தவே மாட்டேன்" என்று கூறினானாம்.**

11 யாரோ ஒருவர் உங்களுடைய அடிச்சுவடுகளை பின்பற்றப் போகிறார் கள். எனவே நாம் தொட்டிலிருந்து கல்வாரி வரையிலும் உள்ள அந்த நேர்ப்பாதையில் நடப்போமாக. அதுவே அடிச்சுவடுக ளாகும்; நாம் அவர்களை அதில் நடக்கச் செய்வோமாக.



ஆனால் ஜெபம் தான் அந்த தீய
பிசாசை அப்பிள்ளையிடத்திலிருந்து
துரத்தியடிக்கும். அது சரியே. ஜெபம்
தான் அதைச் செய்யும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 59-12-23 கேள்விகளும் பதில்களும் COD #12

இப்பொழுது, ஒரு கூட்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லும் படிக்கு தேவன் என்னை வழிநடத்துகிறார், நல்லது, சகோதரனே, எல்லா காரியமும் நடந்தேறுவதை சற்று கவனித்துப் பாருங்கள். அல்லது நீங்கள் என்னை வீட்டிற்குச் செல்ல விடுங்கள், அங்கேயும் நீண்ட தூர தொலைபேசி அழைப்புகள் எனக்கு வருகின்றன. இப்பொழுது நான் வியாதியஸ்தருக்காக ஜெபிக்க வேண்டும். சிறு ஜோசப் நேராக என் கழுத்தை நோக்கி என் மீது ஏறி வருவான். சாராள் ஒரு கேள்வியை என்னிடம் கேட்பாள். பெக்கி பியானோவை வாசிக்க ஆரம்பித்து விடுவாள். நான் "உஷ் - உஷ் - உஷ்!" என்பேன். என்

கையை அவர்கள் மீது வைத்து, “ஹே, உஷ், உஷ், உஷ், நான் - வியாதி யஸ்தருக்காக அப்பா ஜெபிக்கப் போகி றேன்” என்று கூறுவேன்.

“உம், அப்பா, இதோ பாருங்கள், ஜோசப் இவ்வாறு செய்து விட்டான்...” நீங்கள் பாருங்கள்? ஜெபத்தை ஆரம்பித்து விடுவேன். ஜெபம் முடிந்த பிறகு, அவர்கள் தங்கள் பொம்மைகளை எடுத்து அமைதியாக இருப்பார்கள். அது பிசா சாகும். நிச்சயமாக அது அதுவே தான்.

111. பிறகு நான் வந்து, “ஜோசப், நீ இன்ன - இன்ன காரியத்தை செய்யக் கூடாது” என்பேன். உங்களுக்குத் தெரி யுமா, முதலாவதாக அவன் ஒரு பழக்கத்திற்குள் வந்து விடுவான் என்று உங்களுக்குத் தெரியும். உங்கள் பிள்ளை களிடத்திலும் அதை கவனிக்கலாம், அவர்

கள் உங்களிடம் பொய் பேசுவார்கள். ஆம், அது தான் உங்கள் பிள்ளைகள் மேல் இருக்கின்ற பொய்யின் ஆவியாகும். இதற்கு ஒரே ஒரு பரிகாரம் தான் உண்டு. ஒரு பெரிய பிரம்பு அல்ல, உங்களுக்கு தெரியும், சகோதரன் ஜெஸ், நாங்கள் உதை வாங்கின அந்த கோல். நாங்கள் தொல்லையில் சிக்கிக் கொண்டால் பழைய துப்பாக்கிகளிலிருந்து அந்த கோல்களை எடுப்பார்கள், ஹிக்கரி மரத்தின் உறுதி வாய்ந்த கட்டை, உங்களுக்கு தெரியும், பழைய துப்பாக்கி வாய் முகப்பு கட்டை கள். இந்த விதமான பரிகாரம் வேலை செய்யாது. ஆனால் ஜெபம் தான் அந்த தீய பிசாசை அப்பிள்ளையிடத்திலிருந்து துரத்தியடிக்கும். அது சரியே. ஜெபம் தான் அதைச் செய்யும்.

112. ஆகவே உங்கள் சிறு மார்த்தா தன்னுடைய சிறிய காலை உதைத்துக்

கொண்டு, அங்குமிங்கும் வெளியே ஓடி, தன்னுடைய சிறு மூக்கை திருப்பிக் கொண்டிருப்பாளானால், அவள் மீதிருக் கும் ஆடைகள் இல்லாமல் போகும் விதத்தில் அவளை நீங்கள் அடிக்கலாம்; ஆனால் இன்னுமாக அவ்விதமாகவே செய்து கொண்டிருப்பாள். ஆனால் நீங்கள் அதை தேவனுக்கு முன்பாக வைத்து, அப்பிள்ளையின் ஆத்துமாவை தேவனுக் கென்று உரிமை கோருங்கள். நீங்கள் அப்படியே செய்து கொண்டு தரித் திருங்கள். எனக்குத் தெரிந்தவரை அது தான் சிறந்த காரியமென்று நான் விசுவாசிக்கிறேன். ஆம், ஐயா! எனக்குத் தெரிந்த வரை அதுதான் சிறந்த ஒரு பரிகாரம், அது ஜெபம் தான்.


JOHN FALTER

## நீதிமொழிகள் 22:6

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.



# பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து